**O.S. 105/2016 , 22.03.2021, 12.30 pm - 12.45 pm**

**வா.சா.3, சுகிநாராயணன், த/பெ.செல்வராஜ், வயது 31,**

**முதல் விசாரணை:-**

சத்தியமாக சொல்கிறேன். நான், என்னுடைய தகப்பனார் செல்வராஜ் மற்றும் என்னுடைய தாத்தா மாசிலாமணி ஆகிய மூவரும் சேர்ந்து பிரதிவாதிக்கு 66 செண்ட் நிலத்தை 2006ல் விற்பனை செய்தோம், அதற்கான சர்வே எண் தற்பொழுது ஞாபகமில்லை. அதே சர்வே எண்ணில் பிரதிவாதிக்கு விற்பனை செய்ததுபோக சுமாராக 84 செண்ட் நிலத்தை எங்களுடைய அனுபவத்தில் வைத்துகொண்டோம். பிரதிவாதிக்கு கொடுத்த நிலம் வடக்குப்பட்டிலிருந்து இராமநாயக்கன்பேட்டை செல்லும் வழியில் கிழக்கே உள்ளது. பிரதிவாதியின் நிலத்திற்கு பக்கத்தில் ஒரு வரப்பை ஒட்டி நாங்கள் நிறுத்திக்கொண்ட நிலம் உள்ளது. நான், என்னுடைய அப்பா, பாட்டி ஜெயம்மாள் ஆகியோர் சேர்ந்து நாங்கள் நிறுத்திக்கொண்ட மீதமுள்ள இடத்தையும் மற்ற சர்வே எண்.50/2ல் உள்ள நிலத்தையும் ஜி.வெங்கடேசன் என்பவருக்கு விற்பனை செய்தோம். மேற்படி இரண்டு நிலத்திற்கும் சேர்ந்து பம்புசெட், கிணறு உள்ளது. வா.சா.ஆ.1ல் நாங்கள் நிறுத்திக்கொண்டிருக்கும் நிலத்திற்கும், இந்த கிரைய நிலத்தின் வழியாக வேறு சாகுபடி பொருட்களை ஏற்றி போக வர வண்டிவழி பாத்தியம் உண்டு இதை தடைசெய்யகூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சி ஆவணத்தை பார்த்து சாட்சியமளித்தார். அந்த வழி சம்மந்தமாக என்னுடைய தகப்பனாருக்கும், பிரதிவாதிக்கும் பிரச்சனை பயிர் வைக்கும் சமயத்தில் ஏற்பட்டது. அந்த பிரச்சனையின்பொழுது என்னுடைய தகப்பனார் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, ஊரில் பேசி தீர்த்துக்கொள்கிறோம் என்று வந்துவிட்டோம். ஜி.வெங்கடேசன் என்பவரிடமிருந்து வாதி கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தகப்பனார், வெங்கடேசன் அனைவரும் சேர்ந்து பிரதிவாதியின் இடத்தில் மண்ரோடு போட்டோம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. லலிதா என்னுடைய பக்கத்து இடத்துக்காரர் என்றால் சரிதான். எங்களுக்கும், அவர்களுக்கும் பிரச்சனை சம்மந்தமாக சுமார் 5 வருடகாலமாக பேச்சுவார்த்தை இல்லை.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:- 04.35 pm - 04.40 pm**

66 செண்ட நிலத்தை பிரதிவாதிக்கு நான் தான் விற்பனை செய்தேன் என்று சொன்னால் சரிதான். 66 செண்ட் நிலமும் பிரதிவாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வாதி வெங்கடேசன் சொல்லும் வழியானது வரப்பு வழியாக தான் இருந்தது என்று சொன்னால் முன்பு அவ்வாறு இருந்தது. வாதி வெங்கடேசனுக்கு நான் வழி எதுவும் விற்பனை செய்தேனா என்றால் இல்லை. என்னுடைய நிலம் லலிதா நிலத்தை தாண்டி இருந்தது என்று சொன்னால் சரிதான். எனவே, சாலையிலிருந்து பிரதிவாதி நிலத்தை தாண்டி தான் என்னுடைய நிலத்திற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். பயிர் செய்யாத காலத்தில் நாங்கள் அவர்களுக்கு சொத்து விற்றோம் என்ற காரணத்தினால் எங்களுடைய நிலத்திற்கு மாடு, மனிதர்கள் மற்றும் வண்டிகள் செல்வதற்கு பிரதிவாதி நிலம் வழியாக அனுமதிப்பார்கள் என்றால் சரிதான். அந்த வழியானது எனக்கும், லலிதா அவர்களுக்கு மட்டும் தான் உரிமை என்றும், மற்றவர்களுக்கு கிடையாது என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை:-** இல்லை.